# அம்மா

~கவிதைகள்~



தொகுப்பாளர்

திருமலை சுந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மா பதிப்பகம்

# அம்மா

~கவிதைகள்~



தொகுப்பாளர்

## திருமலை சுந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா கவிதைகள்

உரிமை: ப.மோகன்
திருமலை சுந்தா

முதற்பதிப்பு: தை 1998

வெளியீடு: அம்மா பதிப்பகம்
172, பிரதான வீதி,
திருக்கோணமலை.

அச்சிட்டோர்: உதயன் பதிப்பகம்
39, அருணகிரி வீதி,
திருக்கோணமலை.

*******************************************

************* நன்றி ***************

அம்மாவின் காரியங்களில் கலந்து கொண்ட அனைவருக்கும் கலந்து கொள்ளாது கவலை தெரிவித்தவர்களுக்கும் எங்களின்......

*******************************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவிலதே!

"தாயின் பிரிவுதனைத் தாங்கார் துறவியரும்
ஆயின் துயரம் அளவிலதே! - தீயும்
பரிவோடெரிகின்ற பாசம் மறவாமல்
திரிவோம் எம் நாளும் சில!"

-தாமரைத்தீவான்.

# சமர்ப்பணம்



இ. சின்னத்துரை
அவர்களின் மனைவி
எங்கள் அம்மா
திருமதி வள்ளிநாயகம்
அவர்களுக்கு

- திருமலை சுந்தா
- திருமதி. பரராசசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரித்தும் வாழ்பவள்

அம்மாவின்....
விரதங்கள் மட்டுமல்ல
தவமும் கலைந்தது

விளக்கீடு நாளன்று
சொர்க்க வாசல் திறந்த நேரமாம்....
சூரியன் உச்சியில்
வர்ணனுடன் தர்க்கித்த போது
அம்மாவின் ஆத்மா
தெரு வழியே குடை பிடித்து
சைக்கிள் மிதிக்கும் என்னோடு
முட்டியும் உரசியும்....

வாய்க்கு பால் வார்க்க
பக்கத்தில் நானில்லையாம்
அதற்காக
நானேன் அழவேண்டும்?
அழவேண்டாம் என்பது தானே
அம்மாவின் ஆசை

எனது மழலையிலும்
மெல்லிய குரலிலும்
பேச்சிலும் எழுத்திலும்
ஆனந்தித்துப் போன....

அம்மாவுக்கு

கண்களுக்கு மட்டுமல்ல
இதயத்திற்கும் கண்ணுண்டு

மொழி மீது கவி எழுதிய
என்னருமைக் கவிஞர்களின்
அம்மாவின் கவிதைகள்
இனி உங்களுக்கு -நன்றிகள்

அம்மா
அவள் எம்மிடம்
மரித்தும் வாழ்பவள்

- திருமலை சுந்தா -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரோடி விழுதாகி....

உலகுக்கு ஒளியாகி உணர்வுக்குக் கருவாகி
உயிருக்கு வழியாகி நின்றவள் - என்தாய்
உலகத்தைப் படைத்தெனக்குத் தந்தவள்
நிலவுக்கு அழகூட்டி நிறைவுக்கு உணவூட்டி
நிலம்நீர்தீ வான்காற்றாய் நின்றவள் - என்றன்
நெஞ்சுக்குப் பாசமாய் வந்தவள்

சிரிப்பானாள் சிறகானாள் சிறந்தமொழி அறிவானாள்
செழுமை அனைத்துக்கும் பொருளானாள் - சேரும்
சிறப்புக்குத் தானே எருவானாள்
நெருப்பானாள் அந்திக்கு: நிழலானால் துயரத்தில்
நெடுவழிப் பயணத்தில் இணையானாள் - என்றன்
நீள்மூச்சி லெல்லாம் துணையானாள்

ஓடும் குருதி யுடை யணுவெல்லாம் அவளானாள்
ஒவ்வொரு நரம்புக்கும் இழையானாள் - உயிர்
உறைகின்ற உடற்கூறே அவளானாள்
தேடும் நன்மைக்கும் பெருமைக்கும் வழியானாள்
தேவையின் நிறைவுக்கு ஊற்றானாள் - தமிழ்த்
தென்றலின் சுகமே தானானாள்

உலகத்தில் அவளில்லை என்றான போதிலும்
உள்ளத்துள் என்அன்னை வாழ்கின்றாள் - என்றன்
உயிர்துடிக்கும் இதயமாய்ச் சிரிக்கின்றாள்
விலகாத பந்தமாய் வாழ்கின்ற வேதமாய்
விடியலாய் என்அன்னை நிற்கின்றாள் - என்னுள்
வேரோடி விழுதாகிக் காக்கின்றாள்.

- க . கோணேஸ்வரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயெனும் சிற்பிதம்

கருப்பையுள் இருந்த போதே
தனது அன்பெனும் உளியினால்
பட்டுப் போலச் செதுக்கிச் செதுக்கி
தாயென்னை ஈன்றெடுத்தாள்

ஈன்றெடுத்த பின்னாலும் விட்டாளா?
கோணல் மாணலாகாமல்
'மூக்குவா முழியும் வா' வென
மருந்தெண்ணையிட்டு
ஒவ்வோர் அங்கங்களையும்
கைநேர்த்தி செய்து
காலை வெயிலில் உளரவிடுவாள்
களிமண் சிற்பம் போல

இவ்வாறாக
என் தாயொரு சிற்பியானாள்
அவளின் கைதேர்ந்த செதுக்கலில்
நானொரு நடைச் சிற்பமானேன்
கால நடையினில் நானே
என் வாழ்வைச் செதுக்கத் தொடங்கினேன்

வாழ்வைச் செதுக்கும் வலிமை
தாயின் பாலூட்டலிற் சுரந்தது
வாழ்வின் லயம் அவளின்
தாலாட்டைத் தழுவியது

அம்மா என் இரத்தோட்டத்தில்
இன்னுமுன் பாலூட்ட மூலவளம்
காற்றில் இன்னுமுன் தாலாட்டுச் சங்கீதம்

எண்ணிறந்த காயங்கள்பட்ட எம்
தேசத்துக் காற்றிலுன் தெள்ளிய தாலாட்டை
என்னால் தனிபிரித்துக் கேட்க முடிகிறது
பிறந்தகமான எம்தீவைச் சுற்றிலும்
தாலாட்டும் கடலலைகளின் ஓயாமை போல
என் உணர்வெளிப் பரப்பெங்கும்
ஒலித்து நடக்கிறது

தாய்மையின் தித்தியத்துவத்தை ஓதியபடி

-சு.வில்வரெத்தினம்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என் துயர் அறிவாய் - அம்மா!'

மண்ணக வாழ்வி லென்னை
    மைந்தனாய் ஈன்றெ டுத்து
அன்பெனும் கரையே இல்லா
    ஆழியில் நீரு மாட்டி
துன்பமே அணுகா வண்ணம்
    தூய்மையாய் அரவ ணைத்த-
அன்னையே! மண்ணை நீத்து
    அரனடி சேர்ந்திட்டாயோ?

பஞ்சணை போட்டு வைத்தாய்!
    பகலிரா கண்வி ழித்தாய்!
விஞ்சிடும் பாசம் மேவ
    வினைபல புரிந்தாய் நாளும்!
தங்கமே! முத்தே! எந்தன்
    தளிரென அணைத்தெ டுத்துக்-
கொஞ்சிய வுன்னை இந்தக்
    குவலயத் தெங்கு காண்பேன்?

படித்திடப் பள்ளி சேர்த்தாய்!
    பரிவுடன் பேணிக் காத்தாய்!
கடித்திடில் எறும்பு கூட,
    கலங்குவாய்: துடித்துப் போவாய்!
அடியவன் கண்ணீர்விட்டு
    அழுதிடும் நிலையைத் தந்தே,
நெடிதுயில் கொண்டாய்! எந்தன்
    நெஞ்சமோ தாங்குதில்லை!

உண்ணடா மகனே யென்று
    ஊட்டினாய் அடிசில் எல்லாம்!
கண்களோ கலங்கா வண்ணம்
    கவனமாய் உபசரி த்தாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் நான் இளைஞன் ஆகி,
மணமது முடித்த பின்னும்-
எண்ணினாய் என்னை நீதான்
என்றுமே குழந்தையாக!

ஏழ்மையே சேரா வண்ணம்
என்றுமே அடியேன் வாழ்வில்,
தாழ்வின்றி உயர்ச்சி யோடு,
தரணியில் தலைநிமிர்ந்து-
வாழ்ந்திட வைத்த வுன்னை
வாழ்வினில் எங்கு காண்பேன்?
பாழ்மனம் கிடந்து இங்கு
படுந்துயர் அறிவாய் அம்மா!

-அ.கௌரிதாசன்-
ஆலங்கேணி கிழக்கு.

## அன்னைக்கு....

பத்துத் திங்கள் தவமிருந்து
பத்தியால் காத்து வளர்த்தெடுத்த
தத்துவப் பொருளாம் அன்னைக்கு
சமத்துவம் சொல்ல யாருண்டு?

பிஞ்சுக் கால்கள் மிதிக்கையிலும்
கொஞ்சும் மழலைக் குரலினிலும்
நெஞ்சம் நிறையும் தாய்மைக்கு
நிகராய் இங்கே யாருண்டு?

உதிரம் உணவாய் ஊட்டிடுவாள்
உலகம் இதுவெனக் காட்டிடுவாள்
தன்னலங் கருதாத் தாய்மைக்கு
தரணியில் யாரைக் கூறுவதோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் தூசி விழுந்தாலும்
கலங்கிப் போகும் தாயுள்ளம்
பொன்னாய் பூவாய் போற்றுகின்ற
அன்னை அன்பு அமுதாகும்

ஆணோ பெண்ணோ என்றறிய
ஆசைக் கனவில் மிதந்திடுவாள்
சின்னக் குழந்தைச் சிரிப்பினிலே
சினத்தைக் கொன்றே மகிழ்ந்திடுவாள்

பள்ளி செல்லும் வேளையிலே
பணிவிடை செய்து அனுப்பியபின்
உள்ளம் சோர்ந்து வரும்வரையும்
ஏக்கம் சுமந்தே காத்திருப்பாள்

பட்டம் பதவி பெறுவதற்கும்
பலரும் புகழ வாழ்வதற்கும்
கொட்டும் பனியும் கோடைவெயிலும்
கூட இருந்தே உதவிடுவாள்

பெற்ற பிள்ளை மறந்திடினும்
குற்றம் எதுவுங் கூறாமல்
மௌனத் தவத்தால் வாழ்விக்கும்
மனிதத் தெய்வம் தாயாவாள்

அந்திப் பொழுதின் சகவாசம்
தென்றல் சுமக்கும் மலர்வாசம்
வருடிச் செல்லும் அலைபோல
உயிரைத் தடவும் தாய்ப்பாசம்.

-திருமதி. நாகராணி சீதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் துடிக்க நீ ஓடி மறைந்தாய்!

பெற்றவளே! தாயே! பிறர் போற்றும் நிலைதந்து
பெருமையுட னிவ்வுலகில் பேணியெனை வளர்த்தவளே;
நற்றமிழை நானோதி நயந்துசிறக்க மண்ணில்
நாலுவயதி லெனக்கு 'அ'கரத்தைக் கூறிவைத்த
குற்றமில்லாக் குலமகளே! குடும்பத்தின் ஒளிவிளக்கே!
கும்பிட்டுக் காலமெலாம் நின் காலடியை நான் வணங்கும்
நற்பயனைத் தாராமல் ; நடுவழியிலெனை விட்டுவிட்டு
நான் துடிக்க நீ ஓடி மறைந்துவிட்ட மாயமென்ன?

பத்து மாதம் இடைநோவப் பாரிலெனை நீ சுமந்தாய் ;
பட்டதுயர் தான் மறந்தாய் ; பகலென்ன? இரவென்ன?
நித்தமுமென் முகங்காணும் நிலையெண்ணிக் களித்திருந்தாய்;
நிறைமாதம் கண்டு நான் பிறக்க; நிலவு முகம் நீ கண்டாய்;
முத்தே! மரகதமே! முழுநிலவே! என்னுயிர் மூச்சே!
முக்கனியே! சர்க்கரையே! முத்தமிழின் எழிலுருவே!
அத்தனையும் நீ சொன்ன அழகுதமிழ் வார்த்தையம்மா;
அமுதமென அவைவந்து என்காதுகளில் பாய்ந்ததம்மா!

பட்டுச்சட்டை போட்டாய்; பலவாறாயெனை அலங்கரித்தாய் ;
பாற்சோறு ஊட்டுதற்கு பால்நிலாவைத் துணைக்கழைத்தாய் ;
கொட்டும் மழையோ கொடிய வெயிலோ என்மேனிமீது
கொஞ்சமேனும் பட்டுவிடாது பாதுகாத்து வளர்த்தெடுத்தாய் ;
தொட்டு அணைத்து முத்தமிட்டுத் தொல்லைகள் மறந்திருந்தாய் ;
தொட்டிலிலிட்டுத் தாலாட்டி நான் தூங்க; நீ விழித்திருந்தாய் ;
வெட்டுக்கிளி பிடித்து நான் விளையாடிய வேளையிலே பிறர்
வேதனைகள் நானுணரும் விளக்கவுரை நீபடித்தாய் ;

கொஞ்சமா தாயே நீ செய்த தியாகங்கள்? என்னைக்
கொல்லுதம்மா நின்நினைவுகள் ; கொடுந்துயரம் என்று தீரும்?
நெஞ்சிலே உன்நினைவுகள் நெருப்பாகித் தகிக்கையிலே
நேற்றுத்தான் உன்மடியில் கிடந்ததுபோல் தோன்றுதம்மா!
வஞ்சியர் பலர் வருவர் வாழ்வில் உறவுகள் பல தருவர் ;
வஞ்சகமில்லாப் பாசத்தை நீயன்றி யார் தருவார்?
கெஞ்சிநான் அழுதாலும் தொழுதாலும் உன்னன்புமுகங்காண
கோடானகோடி ஆண்டுகள் ஆனாலும் முடியுமோ சொல்லம்மா!

- புரட்சிபாலன் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என் தெய்வம்

அன்னை என்பதோர் அன்பின் வடிவம்
என்னே அவர்புகழ் எங்ஙனம் இயம்புவன்
ஈரைந்து திங்கள் என்தனைச் சுமந்து
ஈன்று புறந்தந்த என்னுயிர்த் தெய்வம்
நேசமும் அறிவும் நிறைத்து அன்பைப்
பாசமாய்க் கொட்டிய பண்பின் சிகரம்
தோளிலே கிடந்து துவண்டு புரண்டு
தாளினால் ஏற்றித் தலைமயிர் ஈர்த்து
வாளினுங் கூரிய வல்லுகிர் அதனால்
வாலை முகமதி வாரிக் குதறினும்
சேலைத் தலைப்பால் செவ்வா யமுதம்
சீராய்த் துடைத்து சிரமது கோதி
வாரி அணைத்து வதனம் வருடும்
ஆருயிர்த் தாய்க்கு அவனியில் ஆரிணை
குடுகுடு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்படை விதிர்த்தும்
கையினாற் புடைத்தும் காலினால் உதைத்தும்
செய்யத் தகாத திருவினை செயினும்
கையைத் தகாத திருவினை செயினும்
கையைப் பற்றிக் கனிவுடன் அணைக்கும்
தையல் தாயே அன்றி யாருளர்
சீறடி நோகாது சிற்றிடை ஏந்தி
நூறாயிரம் அடி மக்கட் காக
ஆறாய் வியர்வை ஊற்ற நடக்கும்
அன்னையை விஞ்சிட அவனியில் ஆருளர்
அல்லும் பகலும் அருகே அமர்ந்து
சொல்லும் பொருளுமாய்க் கல்வி ஊட்டி
இனிய கதைகளாய் இதி காசங்களை
இனிதாய் என்தன் செவிக் குணவாக்கி
பசுமரத்தாணி போற் பதித்தே அகத்து
அன்பையும் பண்பையும் அறிவையும் அன்றி
என்பையும் எனக்கே ஈந்த என்அன்னை
ஓரைந்து ஆண்டில் ஓங்கிய விருட்சமாய்
பாரிலே பாவையைப் பூவை யாக்கிய
பத்தினித் தெய்வமே பத்தரை மாற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமே தாயே மங்கையர் திலகமே
இங்கிப் புவியில் என் அங்கஅசைவின்
ஒவ்வோர் அணுவிலும் 'அம்மா' உறைகிறாள்
'அம்மா' இம்மா நிலத்தில் என்தெய்வம்

-திருமதி.ப.தர்மலிங்கம்

# அன்னைக்கு....

அன்னைக்கு நிகர் உண்டோ
அவள் அன்பிற்கும் அளவுண்டோ?
எண்ணத்தில் உயர்ந்து நின்றாள் - இந்த
மண்ணகத்தில் அவள் நடமாடும் தெய்வம்
அன்னைக்கு நிகர் உண்டோ
அவள் அன்பிற்கும் அளவுண்டோ?
தன்னை உருக்கி ஒளி தரும் தீபம் போல்
அன்னை தரும் அன்பும் சுடர் உருக்கும் தீபமே!
எண்ண எண்ண மெய் சிலிர்க்கும் உடல் புல்லரிக்கும்
அன்னைக்கு நிகர் உண்டோ
அவள் அன்பிற்கும் அளவுண்டோ?
விண்ணகத்தில் உறையும் தெய்வம் மண்ணகத்தில்
எண்ணகத்தால் அன்னை தெய்வம் இந்த
மண்ணகத்தால் வந்துதித்த நடமாடும் தெய்வம்
அன்னைக்கு நிகர் உண்டோ
அவள் அன்பிற்கும் அளவுண்டோ?
பாலூட்டித் தாலாட்டி வளர்த்தாள் - இந்தப்

பாரினிலே பேர் சொல்ல வைத்தாய்
அன்னையும் தெய்வமும் ஒன்றே
இனி அவளை என்றும் மறப்போமோ!!
அன்னைக்கு நிகர் உண்டோ
அவள் அன்பிற்கும் அளவுண்டோ?

- கா. இரத்தினலிங்கம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் தெய்வமே!

கலியோடு எனை ஈண கருத்தரித்து
கண் நோக்கி ஐயிரண்டு மாதம் தூக்கி
வலியோடு எனை ஈன்ற மாதா உன்னை
வாழ்விக்கா நானுமொரு மனிதனன்றோ!
பொலிவோடு தெளிவோடு புவியின் கண்ணே!
போற்றரிய நெறியோடு மனிதனாக
மெலிவாக மெய்வருந்தி காத்த தாயே!
மேதினியிலுனைப் போற்றான் மனிதனன்றோ!

வாய்கட்டி வயிறோடு மனமும் கட்டி
வான்மதிபோலெனை ஈணக்கனவும் கட்டி!
தாயே நீ ஈ நுளம்பு தீண்டா வண்ணம்
தாளாத பாசத்தால் தூக்கம் போக்கி
நோய் நொடிகள் அனுகாமல் அருகிருந்து
நேயமாய் எனைக் காக்கும் முதல் தெய்வமே!
நாயெனை இவ்வுலகில் வாழ விட்ட
நன்றியைச் செலுத்தா நான் மனிதனன்றோ!

உணவுதான், குறைவாக இருந்திட்டாலும்
உன்பசி தீராமல் சேயெனக்கு
மனமாகப் படைத்துமே மனிதனாக்க
மறைவாக உண்மையைக் காட்ட வண்ணம்
குணமாகக் குறையின்றி நானும் வாழ
குவலயம் காட்டிய முதல் தெய்வமே!
இணக்கமாய் நீ வாழும் பணியாலேற்றி
இனிதுற உனைவேண்டான் மனிதனாமோ!

-சிகண்டிதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா எனும்
# மூன்றெழுத்து

அன்புக்கு மூன்றெழுத்து
அறத்திற்கு மூன்றெழுத்து
அறிவுக்கு மூன்றெழுத்து
பரிவுக்கு மூன்றெழுத்து
பாசத்திற்கு மூன்றெழுத்து
பண்புக்கு மூன்றெழுத்து
தூய்மைக்கு மூன்றெழுத்து
வாய்மைக்கு மூன்றெழுத்து
தாய்மைக்கு மூன்றெழுத்து
தமிழுக்கு மூன்றெழுத்து
இவை யாவும் தாங்கிநிற்கும்
'அம்மா'வுக்கு மூன்றெழுத்து
அவள் ஈன்ற மகனுக்கு மூன்றெழுத்து
அவன் நாமம் 'சுந்தர்'வுக்கு மூன்றெழுத்து
எம்மின் அவன் காட்டும் நட்புக்கு மூன்றெழுத்து
அம்மாவூடாய் அவன் நோக்கும் 'கவிதை'க்கு மூன்றெழுத்து
இவையமையும் களத்திற்கு மூன்றெழுத்து
ஆற்றல்களை வெளிக் கொணரும் உன் புதுமைக்கு
மூன்றெழுத்து
புராண மரபுகளை தூக்கியெறியும் துணிவுக்கு மூன்றெழுத்து
நீ இதில் பெறப் போகும் வெற்றிக்கு மூன்றெழுத்து
நண்பா! - மரணித்த மாதாவுக்கூடாய்
இலக்கியப் பங்காளியாக
எனை தேர்ந்து இணைத்தமைக்கு
என்றும் உனை மறவா
எண்ணும் என் 'நன்றி'க்கும் மூன்றெழுத்து

-கனகசபை தேவகடாட்சம்-
மல்லிகைத் தீவு, மூதூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை என்னும் காவியச் சோலையில்....

பாராட்ட அன்னையில்லை பாட்டெழுதி என்ன பயன்?
பாடுகின்ற பாட்டெல்லாம் அன்னை பொழியும் அன்பென்றால் - இன்று,
சீராட்ட அவளில்லை சிந்து துயர்க் கண்ணீரில் -நெஞ்சச்
சிதை பற்றி நான் கதறச் செந்தமிழும் தானழுகும்
(பாராட்ட அன்னையில்லை)

சீராட்டிச் சீராட்டிச் சிந்தைகளி கொள்ள வைத்துச்
சிந்துமிதழ்ப் புன்னகையிற் செந்தமிழைச் சேர்ந்திருந்தாள் - அன்று
பாராட்ட அன்னையிருக்கப் பைந்தமிழ்த் தேன் சேர்த்து - உயிர்ப்
பாட்டாக நான் பாடித் தமிழ்க் கவிஞனென வாழ்ந்திருந்தேன்
(பாராட்ட அன்னையில்லை)

பாட்டிற்கு ஒரு முத்தம் பரி சென்று ஆணையிட்டுப்
பாடிய பின் கேட்டு உச்சி குளிர்ந்திடுவாய் - அன்னை
ஏட்டுக்கு கவியாகி என்னுயிரிற் குடியிருந்து - துயரில்
இன்றென்னை எரிய விட்டு அமரர் திருவடி சேர்ந்து விட்டாய்
(பாராட்ட அன்னையில்லை)

பாலோடு பொற்கலத்தை பாழ்வெளியிற் போட்டது போல்
பைங்கதிரை வெண்ணிலவு பாலையினிற் பெய்தது போல் - வெற்றி
வேலெடுத்துக் கண்ணிரண்டை வீழ்த்தி நிற்கும் பேதமை போல் - இன்று
அன்னை பிரிவில் வெறும் பாழிற் பாட்டெழுதி வேதனையைச் சாந்தமென்றேன்
(பாராட்ட அன்னையில்லை)

**இன்னும்....**

கவிதைகள் பொங்க கவலைகள் உறங்கும்
காவியச் சோலையடா - இதில்
காலத்தை வென்றிட அன்னை அமைத்தாள்
பாசச் சாலையடா
குவிந்திடும் வாழ்க்கை குவியும் வரையிதில்
நடப்பது நிற்காது - சாவு

கொண்டதன் பின்னும் என்னுயிர் தாய்மையின்
அன்பை விட்டுப் பிரியாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமணத் தென்றல் அன்னை போல் என்னைத்
தழுவத் தவறாது - காலைப்
பொழுதில் விரியும் பனிமலர் அன்னை போல்
சிரித்திட மறக்காது
மாமரக் குயிலும் அன்னை போல் பாடல்
பாடாதிருக்காது - இந்த
மகிழ்ச்சியில் மலரும் கவிதை அன்னைபோல்
சுகந்தரச் சளைக்காது

சாலையின் வழியும் சோலையின் நிழலும்
காலத்திலழியாது - என்னைத்
தனிமையில் விட்டுப் பிரிந்த அன்னையின் நினைவோ
சாவிலும் அழியாது
காலைப் பனிபோல் உள்ளத்தில் உறைந்த அன்னையின்
அன்புக்கீடேது - அன்புக்
காவியச் சோலையில் பாடும் கவிஞனின் நெஞ்சம்
அன்னையைத் தவிர எதையும் தேடாது
-செல்லையா நவசோதிராசா-

## தாய்

பொன்னைப் போல் பொருளைப் போல்
பொழுதெலா மெனைக் காத் 'தாய் '
கண்ணைப் போல் கருமணி போல்
காலமெலா மெனைக் காத் 'தாய் '
உன்னைப் போல் உண்மையைப் போல்
உலகத் தோரை உய்வித் 'தாய் '
தன்னைப் போல் தன்மனம் போல்
தரணி யுளோரை நேசித் 'தாய் '

வள்ளலைப் போல் வள்ளுவன் போல்
வரையறை யாய் வாழ்ந் 'தாய் '
கள்ளனைப் போல் கல்நெஞ்சன் போல்
காலமெலாங் கழித்திட மறந்'தாய் '
வெள்ளையைப் போல் வேங்கையைப் போல்
வேதனையை நிதஞ் சுமந் 'தாய் '
கள்ளதைப் போல் காமத்தைப் போல்
கடுகளவும் வாழ மறந் 'தாய் '

- கெஜ தர்மா
நிலாவெளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதோ கனவை....



அம்மா எனும் அந்த அன்பு மலைக் கோயில்
சந்நிதியில் நான் முன்னர் தாவித் தவழ்கையிலே
என்ன நினைவை அவள் என்னில் செதுக்கினளோ
என்ன நினைத்திருப்பாள் எந்தன் மகன் பெரிய
மன்னனாய் காரில் மதிப்போடு மாற்றாரின்
கண்ணில் படமாகும் காட்சி வழியிலவள்
என்னை நிறுத்தி இறும்பூதல் எய்தியிருப்பாள்
என்ன பிழை இற்றைச் சமூக இயல்புகளின்
சின்னம் அவள் வேறு சிந்தை அவட்கேது
பாவமோய் என்னை நிதம் பள்ளிக்கனுப்பியவள்
மோகமுற நானோ முருங்கை மரக்கிளையில்
காகமிருந்து கரையும் அழகினிலும்
வேகமுடன் காற்று விரைய நிலமிருந்து
சேவல் உதிர்த்த சிறகு மிதப்பதிலும்
அண்ணாந்து பார்க்கையிலே அங்கே கரும்பருந்து
பண்ணாய் விசும்பில் படரும் சுருதியிலும்
ஏதோ கனவை இயற்றத் தொடங்கிடுவேன்

-மு.பொ-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையம் போக்கிய....

அரும் பொருளே அம்மா!
அன்பைச் சொரிந்து
ஆசையை அடக்கி
ஆண்டவனை வேண்டி
இன்முகம் காட்டி
இனியன பேசி
ஈகை பழக்கி
ஈயாமை விலக்கி
உற்றாரைப் பேணி
உரியாரைக் காத்து
ஊழல் இன்றி
ஊர் புகழ
எளிமை சேர்த்து
எந்நாளும் வாழ
ஏணியாய் இருந்து
ஏற்றம் பயிற்றி
ஐயம் அகற்றி
ஐசுவரியம் பெற்றிட
ஒற்றுமை வளர்த்து
ஒழுக்கம் புகட்டி
ஓடாய் உழைத்து
ஓய்வின்றி வாழ்ந்து
ஔவையம் போக்கிய
ஔவையே தெய்வமே.

-திருமதி. அன்னலெட்சுமி சுப்பிரமணியம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் அங்கத்தவர்

## சின்னத்துரை - வள்ளிநாயகம்

தனலெட்சுமி பரராசசிங்கம்
சுந்தரலிங்கம் (அசோகா போல்ரி சென்ரர்)

தனலெட்சுமி ..............பரராசசிங்கம்

திருமதி தி.பிரபா
திருமதி சி.றூபா
ப.மோகன் (அசோகா பேக் ஹவுஸ்)
ப.மனோகரன் (ரொலெக்ஸ் கிறீம் ஹவுஸ்)
ப.கிருபாகரன்
ப.வரதன்
ப.சாந்தி
ப.கீதா

பிரபா ........... திருநாவுக்கரசு (சர்மிளா ரேடர்ஸ்)

தி.பிரதீபா தி.சர்மிளா தி.பிரதீசன்
தி.பிரியந்தி தி.பிருந்தா தி.சிவறூபன்

றூபா .......... சிறிஸ்கந்தராஜா (டில்கா கிறீம் ஹவுஸ்)

சாலினி சிறிராஜீவ்
சிறிசஞ்சீவ் தட்சாயினி

மனோகரன் .... இந்திரா (ஆசிரியை-சென்சேவியர் ம.வி.)

மயூரன் அபிராமி மயூரி

கீதா ........... ஜெகதீசன் (ரோயல் கொன்ஸ்ரெக்ஷன்)

சுந்தரலிங்கம் ...ஜெயலெட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்னை

அன்னைக்கு முன் எதையும் காணவில்லை!
அன்னைதான் முன்கண்ட தெய்வமாகும் !
என் அன்னை வயிறே என் ஆதி வீடு!
ஈரைந்து மாதம் நான் இருந்த கோயில் !
பின்னுமவள் மடிதுயிலே பெரிதுவந்தேன் !
பெற்றெடுத்த பின்னுமவள் பேணி வந்தாள் !
கன்னத்தில் கன்னம் வைத்தன்பு செய்தாள் !
கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தாள் !

தாலாட்டுப்பாடி அவள் தூங்க வைத்தாள் !
தலையணையும் ஒருபக்கம் தானுமானாள் !
பாலூட்டிப் பகலிரவின் பசிகள் தீர்த்தாள் !
பாசமொடும், அன்போடும் பார்த்து வந்தாள் !
காலூன்றிக் கைபிடித்துக் காதலித்தாள் !
கட்டியணைத்தெனைத் தூக்கிக் கதைகள் சொன்னாள் !
மேலான தந்தையையும் விளங்க வைத்தாள் !
மேதினியில் தெய்வமெனும் மேன்மையுற்றாள் !

துள்ளி விளையாடுங்கால் பிள்ளையானாள் !
துணையாகி வந்தவளும் உதவி செய்தாள் !
பள்ளி செலும் ஒழுங்கெல்லாம் செய்து தந்தே
பாதிவழி வந்தனுப்பிப் பார்த்து நின்றாள் !
நள்ளிரவில் நோய் கண்டால் நடுக்கமுற்றே
நாட்டு மருந்திட்டெந்தன் நலங்கள் காத்தாள் !
வள்ளலென அத்தனையும் வாரித்தந்தென்
வளமான வாழ்வுக்கே வழிவகுத்தாள் !

இறப்புலகு சென்றாளேல் எந்தன் அன்னை
என்இதயம் உள்ளவரை இந்த மண்ணில் ...
மறப்பேனா, இங்கவளை மறந்துய்வேனா?
மாற்றாளை அன்னை எனக்கொள்ளுவேனா?
துறப்பேனா அவள் பாசம்? பெருமையெல்லாம்
சொல்வேனா, மொழியாலே சொல்லலாமா?
பிறவாளா மீண்டுமவள்? யானும் மீண்டும்
பிறவேனா அவள் வயிற்றில் பொருமையோடே?

-'தாமரைத்தீவான்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின்

## கவிஞர்கள்

- தாமரைத்தீவான்
- அ.கௌரிதாசன்
- திருமதி.நாகராணி ஸ்ரீதரன்
- சு.வில்வரெத்தினம்
- கனகசபை தேவகடாட்சம்
- செல்லையா நவசோதிராஜா
- கெஜ தர்மா
- மு.பொ
- புரட்சிபாலன்
- திருமதி.ப.தர்மலிங்கம்
- கா.இரத்தினலிங்கம்
- சிகண்டிதாசன்
- க.கோணேஸ்வரன்
- திருமதி அன்னலெட்சுமி சுப்பிரமணியம்
- திருமலை சுந்தா

இது

அம்மா பதிப்பகம் - வெளியீடு

பதிப்பு: உதயன் பதிப்பகம், திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org